*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 2
May -2021

# நாலடியாரில் வாழ்வியல் அறங்கள்

விந்தியகௌரி,பொ.
இணைப்பேராசிரியை, தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.

**Corresponding author: vinthiyagowri@vvvcollege.org**

**ஆய்வுச்சாரம்**

நாலடியாரில் செல்வம், இளமை, யாக்கை நிலையாமை போன்ற அறக்கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. மனிதனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் கல்வி அறிவே துணை. மனிதவாழ்வின் மேன்மைக்கு உயர்நட்பு அவசியம். அறவாழ்வு வாழ பொருள் தேவை. இவ்விரண்டும் இருந்தால் வாழ்வு இன்பமாய் இருக்குமென உணர்த்துகிறது நாலடியார்.

**கருச்சொற்கள்: நாலடியாரில் சமூகம், கல்வி, அறிவு, நட்பறங்கள்**

**முன்னுரை**

உலக மொழிகளில் தொன்மையான மொழி தமிழ்மொழி. தமிழ் இலக்கியங்கள் தன்னிகரில்லாத் தகுதியுடையன. முதன்முதலில் ஒழுக்கத்தைப் பற்றித் தனித்தனியாக எழுதப்பட்ட நூல்கள் கீழ்க்கணக்கு நூல்கள். அவற்றுள் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படும் முப்பெரு அறநூல் நாலடியார். இந்நூல் மனித இனத்தின் மேன்மைக்கு வழிகாட்டும் மகத்துவமான நூலாகத் திகழ்கிறது. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்குரிய அறக் கருத்துக்களை வகுத்துத் தந்த பெருமைக்குரியது. நாலடியாரில் வாழ்வியல் அறங்களை ஆராய்வதே கட்டுரையின் நோக்கம்.

**அறம் - விளக்கம்**

அறத்தைப் பற்றிப் பேசும் தமிழ்நூல்கள் மிகப் பலவாக உள்ளன. ‘அறு’ என்னும் வினைச்சொல் அடியாகப் பிறந்ததே ‘அறம்’ என்னும் சொல்லாகும். ‘அறு’ எனும் அடிச் சொல்லிற்கு ‘அறுத்துச்செல்’ ‘வழியை உண்டாக்கு’, ‘உருவாக்கு’, ‘துண்டி’, ‘வேறுபடுத்து’ என்று பலவகைப் பொருள்கள் வழங்குகின்றன. இதனால் மனித வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கான நல்வழியைக் காட்டி தீமையை அறுத்தெரிவது அறம் என்பது தெளிவாகிறது. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க

முறைகளின் தொகுதியின், முழுநிறை வடிவமே அறம்.

**'அறத்தான் வருவதே இன்பம்' —** திருக்குறள் - 49 எனும் திருவள்ளுவரின் கருத்து, மானிட மதிப்பு' களில் (Human values) முதன்மை இடம் பெற்றுள்ளது. **'இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்'**[1] என்கிறார் தொல்காப்பியர். மனிதனுக்கு 'இன்ப நாட்டம்' இயல்பாகவே இருந்து வருகிறது இதனை 'அறிவுநல இன்பம்' என்பார் பிராய்ட் 'மனநலம்' என்பார் வள்ளுவர்.

இன்பம் புலன்நுகர் இன்பம் (pleasure) அன்று. மனநிறைவால் தோன்றும் மகிழ்வுநல இன்பமாகும். இதனை,

> **"அறம் என்பது நன்மை**
> **நன்மை என்பது பயன் தருவது**
> **பயன் தருவன எல்லாம் இன்பம அளிப்பன்**
> **அறிவு பயன் தருகிறது**
> **அறிவு இன்பம் தருவதே".**[2]

எனவே அறமும் இன்பம் தருவதே எனும் முறையில் சாக்ரடிசின் வாதம் விரிந்து செல்வதாகப் பிளேட்டோ, தம் நூல்களில் காட்டியுள்ளார்.

**அறன் வலியுறுத்தல்**

மக்கள் உடலைப் பாதுகாக்க வேண்டும். அதைவிட உள்ளத்தை ஓம்புதல் வேண்டும். அறவாழ்வு வாழாதவர் மிகுந்த துன்பத்தினை அடைவர். எனவே, அரிய உடம்பால் பெரும் பயனுடைய அறச்செயல்கள் செய்து முடித்தல் வேண்டும்.

> **"கரும்பு ஆட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**
> **துரும்பு எழுந்து வேங்கால் துயர் ஆண்டு உழவார்**
> **வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**
> **வருங்கால் பரிவது இலர்".**

**நாலடியார் - 35.**

என்று அறத்தொண்டு செய்வதை வற்புறுத்துகிறது. மிகச் சிறியதாகிய ஆலம்விதை முளைத்து வளர்ந்து விழுது விட்டுப் பெரிய அளவு நிழலைத் தருகிறது. அதைப்போல சான்றோர் வழிச் செய்யப் பெறும் அறத்தின் பயன்கள் வானத்தையே சிறியதாக்கி வியாபித்துவிடும். அதனால் உயிருடன் இருக்கும்போதே உயிர்களுக்கு அறச் செயல்களைச் செய்ய வேண்டுமென நாலடியார் வலியுறுத்துகிறது.

**சமுதாய அறம்**

"சமுதாயம் என்பது கூட்டு வாழ்க்கை அல்லது மனித இனத்தின் மேம்பாடான வடிவம் ஆகும்"[3] எனச் செயப்பிரகாசு குறிப்பிடுகிறார். மாசு நீங்கிய தெளிவினையுடையார் பிறர் பொருளைக் கவரார். கள் அருந்தார். விலக்கத் தகுந்த தீயவற்றை விலக்கி, அவற்றின் நீங்கித் தூயராகி, பிறரை அவமதித்து இகழ்ந்து உரையாடாமல் விளங்குவர். பொய் சொல்லார். வினைவயத்தால் தம் செல்வாக்குக் குறையின் அதற்காக வருந்துவதும் இலர் என்று மேன்மக்களின் இயல்பு கூறி மக்களை நல்வழிப்படுத்துகிறது.

"ஒரு வரையறுக்கப்பட்ட பரப்பின் கீழ்வாழும் மக்களுடைய சமூக வாழ்க்கையின் முழுமையான அமைப்பே சமுதாயம் ஆகும்".[4] செல்வமானது எவரிடமும் நிலைத்து நிற்பதில்லை. அதனால் நேர்மையான முறையில் சேர்த்த செல்வத்தை, இல்லாதோர்க்குக் கொடுத்து வாழவேண்டும். மரங்களில் கனிந்த பழங்கள் உதிர்வதற்குப் பதிலாகத் தீமைதரும் புயற்காற்றால் நல்ல காய்களும் உதிர்ந்துவிடுவது உண்டு. அதைப்போல இளைய மனிதற்கு இறப்பு நிகழ்தலும்

உண்டு. எனவே, வாழ்நாள் முடியும்முன் அறங்கள் செய்க என நாலடியார் நவில்கிறது. நிலையில்லாத உடம்பின் வழி நிலையானவற்றைச் செய்தல் வேண்டும் என்பதை

**"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்று எண்ணி**
**இன்னினியே செய்க அறவினை - இன்னினியே**
**நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்**
**சென்றான் எனப்படுத லால்".**

**நாலடியார் - 29.**

என்று மனித வாழ்வில் நடப்பதைத் தெளிவாக விளக்குகிறது.

"Society may be defined as the total complex of human relationships in so far as they grow out of action interms of the means end relationship intrinsic or symbolic".[5] என்று சமுதாயம் என்பதற்கு விளக்கமளிக்கிறார் டால்பாட் பார்சன். வாழ்க்கையில் தவமுயற்சியுடையவராய் வாழ்தல் தலையானதாகும். தமக்கு இனியராயிருக்கும் மனைவி மக்கள் முதலிய உறவினரிடத்து மனந்தங்கி அவரவரோடு ஒழுகுதல் இடைத்தரமான வாழ்வாகும். மேற்கூரிய இருவகை வாழ்வின் முயற்சியும் தமக்குக் கைகூடாதென்று நினைந்து வெறும் பொருள் விருப்பத்தால் தம் குடிப்பிறப்பு கல்வி முதலிய தகுதிகளையும் கருதிப்பாராது நடத்துஞ் செல்வர்களின் பின் சென்று நிற்கும் அடிமைநிலை கடைப்பட்ட வாழ்வாகும். தலை, இடை, கடையெனக் கூறிய வாழ்வுமுறை அருள் வாழ்வு, அன்பு வாழ்வு, அடிமை வாழ்வுமாகும் என்று மனிதன் பகுத்தறிவால் நல்வாழ்வு வாழ வழிகாட்டுகிறது. மேலும் தனிமனிதன் மானத்தோடும் தன்மானத்தோடும் வாழ நெறிப்படுத்துகிறது.

**"என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று**
**தம்பா டுரைப்பரோ தம்முடையார் - தம்பாடு**
**உரையாமை முன்னுணரும் ஒண்மை யுடையார்க்கு**
**உரையாரோ தாமுற்ற நோய்".**

**நாலடியார் - 292.**

என்று மனிதன் மாமனிதனாகத் திகழ சமூகம் மேம்பாடு அடைய நெறிப்படுத்துகிறது.

**கல்வியறம்**

தனிமனித வாழ்வையும் நாட்டின் முன்னேற்றத்தையும் உயர்த்துவது கல்வி. கல்வி என்ற சொல்லுக்கு மனத்தைப் பண்படுத்துதல் என்பதே பொருள். கல்வியே மக்களின் வாழ்க்கையில் அழியாத, குறையாத வளரும் செல்வமாக இடம்பெறுகின்றது. பிறவிதோறும் பயனைத்தரும் சிறப்பினை உடையது கல்வி என்பதை திருவள்ளுவர்

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

**- திருக்குறள் - 398**

என்று குறிப்பிடுகிறார். கல்வி என்பது அறியாமை நோயை வேரோடு அழிப்பது. இதனையே,

**"இம்மை பயக்குமால் ஈயக்குறைவு இன்றால்**
**தம்மை விளக்குமால் தாம்உளராக் கேடுஇன்றால்**
**எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து"**

**நாலடியார் - 132.**

என்று கல்வியின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது. ஏனையவை கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் கல்வியோ கொடுக்கக் கொடுக்கப் பெருகும். இதுவே கல்வியின் தனிச்சிறப்புகளுள் தலையாயது. விளைநிலத்துப் பிறந்த நெல்லும் உவர் நிலத்துப் பிறந்த உப்பும் ஒரே சிறப்பிற்குரியவை. அதனைப்போலவே கடை நிலத்திலிருந்து கற்று உயர்வோர் தலைநிலத்தவராகக் கருதப்படுவர்.

இதன்மூலம் மனிதனுக்குக் கல்வியே தகுதி என்பது உணர்த்தப்படுகிறது. கல்வி யாராலும் திருடப்படா, கேட்போர்க்கும் ஏற்போர்க்கும் கொடுப்பதால் குறைவுபடா, அரசால் அபகரிக்கப்படா. எனவே,

"எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற".

நாலடியார் - 134.

என்று தந்தையின் கடமையைப் புலப்படுத்துகிறது. ஏடுவழிப்பெறும் எழுத்துக் கல்வி மட்டுமல்லாமல் எல்லாவகைத் தொழிற்கல்வியையும் உள்ளடக்கிய சொல் 'வித்தை' என்பதாகும். மக்கள் நல்வாழ்வு வாழ இன்றைய சூழலில் தொழிற்கல்வி அவசியம் என்பதை அன்றே அறிவுறுத்தியது நாலடியார்.

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற பொன்முடியார் சொற்படி தந்தையானவன் மக்களைக் கல்வி கேள்விகளால் அறிவுடையவராக்க வேண்டும்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

திருக்குறள் - 67

என்கிறது திருக்குறள்.பாதிரிப்பூ இருந்த புதுப்பானைநீர் மணப்பதுபோலக் கற்ற நல்லவருடன் சேரும் கல்லாதவரும் கல்விமணம் எய்தப் பெறுவர். இன்றைய உலகத்தில் புற்றீசல் போல் நிறைய நூல்கள் உள்ளன. எல்லாவற்றையும் கற்க வேண்டியதில்லை. வாழ்க்கைக்கு ஏற்புடைய நல்ல நூல்களை மட்டுமே கற்கவேண்டும்.

**நட்பறம்**

தமிழ் இலக்கியம் காலந்தோறும் நட்புஎனும் விழுமியத்திற்கு உயர்ந்த இடத்தினைத் தந்து வந்துள்ளது. தொல்காப்பியர், 'தாங்கருஞ் சிறப்பின் தோழி' எனத் தோழியைச் சிறப்பித்துக் கூறுவார். சங்க அகத்திணைப் பாடல்களில் தோழிபெறும் இடம் முதன்மையானது. நாலடியார் 'நட்பாராய்தல்', 'நட்பில் பிழைபொறுத்தல்', 'கூடா நட்பு' எனும் மூன்று தலைப்புகளில் நட்புக் கோட்பாட்டின் பல்வேறு பரிணாமங்களை எடுத்துரைக்கிறது.

"கோட்டுப் பூப்போல மலர்ந்துபின் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பு"

நாலடியார் - 215

என்று உயர் நட்பின் தன்மை குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லோர் நட்பு நுனிக்கரும்பு தொடங்கி அடிக்கரும்பைத் தின்பதற்கு நிகராகும். அல்லாதார் நட்பு அடிக்கரும்பிலிருந்து நுனிக்கரும்பைத் தின்பதற்கு ஒப்பாகும் என்கிறது நாலடியார். நல்ல நண்பரை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்கு விடையாக மனிதர் உள்ளொன்றும் புறம் ஒன்றாக நடிப்பர். ஏமாற்றுவர். அதை உணர்ந்து பிறந்த குடி, நடுவில் மாறா மனநிலை முதலியவற்றை விசாரித்து அறிந்த பின்பே நண்பரைத் தீர்மானித்தல் வேண்டும்.

"பலநாளும் பக்கத்தார் ஆயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார் - பலநாளும்
நீத்தார் எனக்கை விடல் உண்டோ தம்நெஞ்சத்து
யாத்தாரோடு யாத்த தொடர்பு"

. நாலடியார் 214

இதன் மூலம் நட்புக்குக் காலமும் தொலைவும் கணக்குகள் அல்ல. ஆழமும் அன்புமே அடிப்படைகள் என்பதை அறிய முடிகிறது.

**நட்பின் வகைகள்**

நட்பு மூன்று வகைப்படும். அவை:

❖ பாக்குமர நட்பு

❖ தென்னைமர நட்பு

❖ பனைமர நட்பு

பாக்குமர நட்பு கடைத்தரத்தது. ஓயாமல் போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருந்தால் தான் பாக்குமரம் காய்க்கும், பயன் கொடுக்கும். இந்த வகை நண்பர்கள் எப்போதும் உதவியை எதிர்பார்த்துக் கொண்டு நட்பு செய்வர். தென்னை மரநட்பு இரண்டாந்தரத்தது. தொடர்ந்து போற்றாவிட்டாலும் இடையிடையே போற்ற வேண்டும். அப்போது தான் காய்க்கும், பயன்தரும். நடுத்தர நட்பினர் இத்தகையர். பனைமரநட்பு, பனைமரம் வளர எந்த விதமான பாதுகாப்பும் தேவையில்லை: பனங்கொட்டையை நிலத்தில் ஊன்றிவிட்டு வந்துவிட்டால் போதும் அது வளர்ந்து பயனைத் தரும். இத்தகைய குணம் கொண்டோரே தலையாய நட்பாளர்.

உமியை நினைத்து நெல்லையும், நுரையை நினைத்து நீரையும், புற இதழை நினைத்துப் பூவையும், குறையை நினைத்து நண்பனையும் இழத்தல் கூடாது என்று நட்பில் பிழைபொறுத்தல் அவசியத்தை அழகிய உவமைகள் அமைந்த பாடல்கள் விளக்குகின்றன.

**கூடாநட்பு குறித்து நாலடியார் பகரும் நுட்பமான கருத்துக்கள்**

- நட்பிற்கு அருகதை இல்லாத தன்னலக்காரர், தம் தேவை முடியும் வரை நண்பனுடன் இருந்துவிட்டு தேவை முடிந்தவுடன் போய்விடுவர்.
- நல்லவர் நட்பு மழைக்கு நிகர் தீயவர் நட்பு மழை இன்மைக்கு நிகர்.
- பாசபந்தம் இல்லாதவர் நட்பு வைக்கோல் போல் பற்றிப் பெரிதாக எரிந்து சிறிது பொழுதில் சிறுத்து ஒன்றுமில்லாமல் போனது போல் போய்விடும்.
- நல்லோருடன் பழகினாலும் தமது கெட்டகுணத்தை விடாதவராகிய கூடா நட்பினருடன் உறவு வைத்திருத்தல் கூடாது.
- அறம் இல்லாது உருவ அழகிருந்து பயனில்லை. அறிவு இருந்து தீ இனத்தாருடன் சேர்தல் அழிவிற்கு வழி வகுக்கும்.
- மனப் பொருத்தம் இல்லாதவர்களுடைய நட்பானது, வயது வந்த சிறிய குரங்கானது தன்னை விடவும் மூத்த தன்தந்தையை, பயிற்றுக்காயின் நெற்றைப் போன்ற விரல்கள் கொண்டு தாக்கிக் குத்தி, அது வைத்திருந்த இரையைப் பிடுங்கும் செயலைப் போன்று துன்பமுடையதாகக் காணப்படும்.

**அறிவறம்**

**'அறிவு அற்றம் காக்கும் கருவி என்கிறது வள்ளுவம்'** அறிவு எல்லாவற்றையும் அளிக்கும் ஆற்றல் உடையது. அது நுண்பொருளாயினும் ஆல விதை போல பல விழுதுகளை உள்ளடக்கியது. எனவே தான், அதைக்கொண்டு எல்லாவற்றையும் பெறமுடியும் - உணர்த்த முடியும் - உருவாக்கமுடியும் - மேம்படுத்த முடியும்

என உணர்ந்து அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

அறிவு என்பது நல்லது எது? தீயது எது? என்று உணர்வதே. அறிவால் தீமையை விலக்கி நன்மை தரும் செயல்களைச் செய்து தனிமனிதனுக்கும் நாட்டிற்கும் உலகிற்கும் பெரும் பயன்களைச் செய்யவேண்டும்.

மனிதன் அறிவினாலே உலகம் வளர்ச்சியடைந்துள்ளது. எனவே, மனிதன் நிலைதடுமாறும் போது அறிவினால் தானே தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். நல்ல மனிதனுக்குப் பொன்னையும் பொருளையும் விட உயர்ந்த உடைமை அறிவுடைமையே.

> **"நல்நிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை**
> **நிலை கலக்கித் கீழ்இடுவானும்-நிலையினும்**
> **மேல்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்**
> **தலையாகச் செய்வானும் தான்."**
>
> நாலடியார் 248

ஒருவனது உயர்வும் தாழ்வும் அவனது முயற்சியின் அளவைப் பொறுத்தே அமைந்துள்ளது என்பதை இப்பாடல் விளக்குகிறது.

உலக நடைமுறைகளை அறிந்தவர்களால் மட்டுமே உயர் வாழ்க்கை வாழமுடியும். நற்செயலை முடிக்க வாய்ப்பாகக் கல்லாதாரையும் இணைத்துக் கொள்ளல் அறிவுடைமையே என்கிறது நாலடியார்.

## முடிவுரை

பொருள் சேர்ப்பதற்கு வாய்ப்பான தொழில்களைச் செய்து, பொருள் சேர்த்து அதன் வழிவரும் இன்பம் துய்த்து, உரிய அறங்களையும் நல்லவர்க்காகத் தடையின்றிச் செய்து, பொருள், இன்பம், அறம் என்ற மூன்றையும் ஒருவன் ஒருத்தன்மையனவாகவே முடித்து வெற்றி பெறுவதே சிறந்த வாழ்க்கை. நாலடியாரின் அறக்கருத்துகள் போற்றப்படுவதற்கும் இன்றும் நிலைத்து வாழ்வதற்கும் அடிப்படைக்காரணம் மனிதனின் நல்லுள்ளமே. நாலடியார் நவிலும் நற்கருத்துக்கள் அடிப்படையானவை. ஆழமானவை: தொலைநோக்குப் பார்வையுடையவை. எனவே, மனித வாழ்வு உன்னத நிலையடைய நாள்தோறும் அறவாழ்வு வாழவேண்டும்.

## அடிக்குறிப்புகள்


1. அறவாணன், க.ப., அற இலக்கியக் களஞ்சியம், ப.26
2. பாங்கல், இல்பர்ட், க.எஸ்.ஜே., சமுதாய அடிப்படைக் கோட்பாடு, ப.13.
3. திருநாவுக்கரசு, க.த., சாக்ரடிசும் திருவள்ளுவரும் - சான்றோர் கண்ட திருவள்ளுவர், ப.31
4. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம். நூற்பா எண். 29.
5. செயப்பிரகாசு, சிலப்பதிகாரம் காட்டும் தமிழ் சமுதாயநிலை, ப.38.